# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590

**ஆணை நாள் 10.11.2020**

**முன்னிலை**

**திரு.ச.செல்வராஜ்,எம்.ஏ.,பி.எட்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 639/விசாரணை/E/2019**

திரு.வி.ரவிச்சந்திரன் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
அரசு மருத்துவமனை,
திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (Lockdown) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால் இன்று (10.11.2020) முற்பகலில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு.வி.ரவிச்சந்திரன் பங்கேற்றார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை பொதுத் தகவல் அலுவலரை இவ்வாணையத்தால் தொலைபேசியில் தொடர்பு கொள்ள இயலாத காரணத்தால், மரு.J.இராஜமூர்த்தி. துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அலுவலகம், திருவாரூர் மாவட்டம் மற்றும் திருமதி.உஷா, உதவியாளர், துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகம், திருவாரூர் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் 24.10.2018 தேதியிட்டு அலுவலக திருவாரூர், இணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், தனது தகப்பனார் திரு.பி.விஸ்வநாதன், திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் மருந்தாளுனராக பணிபுரிந்து கடந்த 31.03.1992-ல் பணி ஓய்வு பெற்று, அதன் பின்னர் 01.06.2008-ல் இயற்கை

எய்தினார் என்றும், அன்னாரது பணிப்பதிவேடு குடும்ப ஓய்வூதிய நிலுவைத் தொகை தொடர்பாக தேவைப்படுவதால் பணிப்பதிவேட்டின் நகலை தகவலாக வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 30.10.2018 தேதியிட்ட கடிதத்தில், மேல்முறையீட்டாளரின் மனுவை திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றுதலில் அனுப்பி வைத்துள்ளார். தகவல் கிடைக்கப் பெறாததால் மேல்முறையீட்டாளர் 21.12.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவினை சென்னை மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை அலுவலக கூடுதல் இயக்குநருக்குத் தாக்கல் செய்திட, சென்னை-6 மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் தனியரின் கோரிக்கைகளுக்கு பிரிவு 2(f)-ன் கீழ் பதில் வழங்க இயலாது எனத் தெரிவித்துள்ளார். தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவல்களை தனக்கு வழங்கிட உத்தரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 18.01.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (10.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசியில் வாயிலாக ஆஜராகி, தான் 24.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில், தனது தகப்பனார் திரு.பி.விஸ்வநாதன், திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் மருந்தாளுனராக பணிபுரிந்து கடந்த 31.03.1992-ல் பணி ஓய்வு பெற்று, அதன் பின்னர் 01.06.2008-ல் இயற்கை எய்தினார் என்றும், அன்னாரது பணிப்பதிவேடு குடும்ப ஓய்வூதிய நிலுவைத் தொகை தொடர்பாக தேவைப்படுவதால் பணிப்பதிவேட்டின் நகலை தகவலாக வழங்கக் கோரியதற்கு, இதுநாள் வரை எந்தவித தகவலும் வழங்கப்படவில்லை என்றும், தனக்கு தற்போது 57 வயது ஆகிறது என்றும், தான் மேற்படி காலத்தில் மலேசியா நாட்டில் பணிபுரிந்தால் ஓய்வூதியம் பெற நடவடிக்கை இயலவில்லை என்றும், தற்போது இந்தியாவில் இருந்து வருவதாகவும், வயது முதிர்வில் உள்ள தனது தாய்க்கு கிடைக்க குடும்ப ஓய்வூதியம் நிலுவைத் தொகை பெறுவதற்காகவே தான் தகவலை கோரியுள்ளதாகவும், ஆகவே தான் கோரிய தகவலை வழங்கிட பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடுமாறும் ஆணையத்தை கோரினார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

4. இது குறித்து இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு ஆஜரான திருவாரூர் நலப்பணிகள் இணை இயக்குநரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளரின் தந்தை திரு.விஸ்வநாதன் பணிபுரிந்த திருத்துறைப்பூண்டி மருத்துவமனையானது ஏற்கனவே நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருந்ததாகவும், தற்போது அம்மருத்துவமனை திருவாரூர் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும், ஆகவே மேல்முறையீட்டாளரின் தந்தையின் பணிப்பதிவேட்டை கேட்டு திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை முதன்மை குடிமுறை மருத்துவ அலுவலர் 18.01.2019 அன்று நாகப்பட்டினம் இணை இயக்குநர் நலப்பணிகள் அவர்களுக்கு கடிதம் எழுதியதன் அடிப்படையில், நாகப்பட்டினம் நலப்பணிகள் இணை இயக்குநர் 04.03.2019 தேதியிட்ட கடிதத்தில், தனியரின் பணிப்பதிவேடு 2004ல் ஏற்பட்ட சுனாமி பேரலையால் அழிந்துவிட்டதாக தெரிவித்துள்ளார் என்று அக்கடித நகலை வாட்ஸ்அப் செயலி மூலம் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மேல்முறையீட்டாளரின் தந்தையின் பணிப்பதிவேடு அழிந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், மிகவும் வயதுமுதிர்ந்த அவரது தாய்க்கு கிடைக்க வேண்டிய ஓய்வுதிய பலன்களை கோரி மேல்முறையீட்டாளர் நாடும்போது உரிய உதவிகளையும்,

நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக இணை இயக்குநர் அவர்கள் எடுத்துரைத்ததை இவ்வாணையம் பதிவு செய்கிறது.

5. ஆகவே இன்றைய விசாரணையில், மேல்முறையீட்டாளர் கோரியுள்ள அவரது தந்தை திரு.விஸ்வநாதன் என்பவரின் பணிப்பதிவேடு சுனாமி பேரலையால் அழிந்துவிட்டதாக தெரிவித்துள்ள நாகப்பட்டினம், நலப்பணிகள் துணை இயக்குநரின் 04.03.2019 கடிதத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 7 தினங்களுக்குள், மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் ஆணையத்திற்கு சமர்ப்பிக்குமாறு திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து, இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-.ச.செல்வராஜ்,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 639/விசாரணை/E/2019</u>**

பெறுநர்
இணை இயக்குநர்,
இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகம்,
திருவாரூர்,
திருவாரூர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
அரசு மருத்துவமனை,
திருத்துறைப்பூண்டி,
திருவாரூர் மாவட்டம்.

திரு.வி.ரவிச்சந்திரன் த/பெ.விஸ்வநாதன்,
சாய் இல்லம்,
66 மூன்றாம் தெரு,
வேதாரண்யம்-614 810.

Copy to: File

RJ/PS 12.11.2020